புலத்கொஹுபிடிய பிரதேச சபை - 2022

----------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொலைபேசி கோபுரமொன்றிலிருந்து மற்றும் கண்காட்ச்சி நுழைவுச் சீட்டுக்களிலிருந்து ரூபா 160,200 தொகை வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக. | சரயாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை கணக்குகள் கோவையின் பிரகாரம் பாதைகள் கணக்கீடு செய்யப்படாத போதும் ரூபா 123,795,437 ஆன பாதைகள் கணக்கீடு செய்யப்படடிருந்தன. | மத்திய அரசு மற்றும் மாகாண சபையினால் கைத்தொழிலை பெயரிட்ட பின்னர் பாதையை அபிவிருத்தி செய்வதாக மற்றும் அங்கு குறித்த பாதை சபைக்கு சொந்தமானதா என தேடிப்பார்பதில்லையென. | - மேற்படி - |
| (இ) | பெறுமதி ரூபா 800,000 ஆன பேலர் இயந்திரம் மற்றும் கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 10,060 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 கணக்கு தயாரிக்கும் போது உள்ளீடு செய்வதாக. | - மேற்படி - |

#### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றுகை கூற்றின் பிரகாரம் 08 கணக்கு விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதி காணப்பட்ட மீதி, அதற்குரிய துணையேடுகளில் அத்திகதியில் காணப்பட்ட மீதியுடன் இணக்கஞ் செய்கையில் ரூபா 99,805 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை கண்டறிந்து சரிசெய்வதாக. | நிதிக்கூற்றுப் பெறுமதிகள், துணையேடுகளுடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,854,628 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 872,922 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| .................. | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,851,150 | 1,937,458 | 1,978,800 | 152,753 | 1,736,600 | 1,754,219 | 1,662,621 | 223,738 |
| வாடகை | 6,202,500 | 2,089,923 | 2,089,923 | 523,465 | 2,804,800 | 1,827,873 | 1,836,773 | 523,465 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 386,200 | 303,900 | 303,900 | - | 410,200 | 393,760 | 380,860 | - |
| ஏனைய வருமானம் | 3,851,650 | 2,427,747 | 2,480,947 | - | 3,001,400 | 2,837,216 | 2,791,430 | 37,580, |
| | 12,291,500 | 6,759,028 | 6,853,570 | 676,218 | 7,952,400 | 6,813,068 | 6,671,684 | 784,783 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை ஆகிய வருமான விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 630,612 அறவிட வேண்டியதாக நிலவியது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 523,465 ஆன மீதி காணப்பட்டது. | நிலுவை தொகை எதிர்காலத்தில் அறவிடுவதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | அரச மதிப்பீட்டிற்கு பொருந்தாது சபை தீர்மானமொன்றின் மீது கடையறைகளிலிருந்து வாடகை அறவிடப்படுவதால் 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை ரூபா 2,388,750 ஆன வாடகை வருமான இழக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானதாக. | சபைக்கு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டுகளில் தொற்று நோயிக்காக கிடைத்த உதவி ரூபா 300,000 இனை அச் செயற்பாட்டிற்கு பயன்படுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இதற்கு தேவையான பொருட்கள் தவறுதலாக செலவு விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனை 2023 ஆண்டில் சரிசெய்வதாக. | தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 624,554 ஆன வேலை கடன்படுனர் மீதி 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழையதானதுடன் 01 ஆண்டிற்கும் 04 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 87,200 ஆன கடன்கொடுனர் மீதியும் காணப்பட்டது. | ஒரு பகுதி தற்போது கிடைத்துள்ளதாக மற்றும் செலுத்த வேண்டிய மீதியிலிருந்து ஒரு பகுதியை தீர்த்துள்ளதாக. | கடன்படுனர் கடன்கொடுனர் மீதிகளை நாளாதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

### 3.2 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| ஹாதாகொட, பன்னல பூனேஹெல ஒய ஊடாக போடப்பட்டிருந்த பழைய இரும்பு பாலத்தை கழற்றி அகற்றும் போது அதனுடைய இருப்புப் பகுதிகள் தொடர்பாக தகவல்களை வழங்க சபைக்கு இயலாதிருந்தது. | இது தொடர்பாக பிரதேச சபையிடம் கடிதக் கோவையொன்று இல்லையென. | இது தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டில் சபைக்கு கிடைத்த ரூபா 6,221,373 ஆன கெம்பெக்டர் கிடைத்த திகதி முதல் விளைவற்று காணப்பட்டது | இவ் இயந்திரத்தை கொடக்கவெல பிரதேச சபைக்கு ஒப்படைக்கவுள்ளதாக. | சொத்துக்களை பயனுறுதி மிக்கதாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 5,045,318 அன 03 வாகனங்கள் 02 ஆண்டுகளிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக செயலற்றுக் காணப்பட்டது. | சபையின் நிதி நிலைமை சீரற்ற காரணத்தால் இவ் வாகனங்களின் திருத்த வேலைகள் தாமதித்துள்ளதாக. | தாமதமின்றி திருத்த வேண்டும். |
| (இ) | சபை பயன்படுத்தும் ரூபா 20,551,373 ஆன 10 வாகனங்கள் மற்றும் ரூபா 523,000 ஆன 02 டேலர்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவிய நிதி நெருக்கடியின் முன் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தாமதித்ததுடன் பொது நிர்வாக அமைச்சின் வாகனங்களின் உரிமையை ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக. | தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 02 வாகனங்கள் 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயன்படுத்தாது காணப்பட்டதுடன், 02 டெக்டர்கள் குறை பயன்பாட்டுடன் நிலவியது. | வாகனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை பயன்படுத்தாது வைக்கக் கூடாது. |